# முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்: ஊரகப் பகுதிகளில் அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர் !



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், காந்திகிராமம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் தமிழக முதல்வரின் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை துவக்கி வைத்த திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் துவக்கி வைத்தார்.அதன்பின்னர் காந்திகிராமம் ஊராட்சியைச் சேர்ந்த 16 பேருக்கு கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்கான ஆணையையும் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பாஸ்கரன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், பாறைப்பட்டி ராமன், ஊராட்சி மன்றத்தலைவர் தங்கமுனியம்மாள் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, ஊரகப் பகுதிகளில் அரசு உதவிபெறும், தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்து மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை, திருவள்ளூர் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இதனையடுத்து கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆடூர்குப்பம் கிராமம், இராதாகிருஷணன் கல்வி நிலைய நடுநிலைப் பள்ளியில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் தலைமையில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாணவர்களுக்கு காலை உணவு பரிமாறி, அவர்களுக்கு உணவினை ஊட்டியும், மாணாக்கர்களுடன் அமர்ந்து காலை உணவு உண்டார். இந்நிகழ்வில் எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், குறிச்சி கோட்டை ஆர்.வி.ஜி அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞான மூர்த்தி, க.செந்தில்குமார், உடுமலைப்பேட்டை ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகாலட்சுமி முருகன், ஊராட்சி மன்ற தலைவர் கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் கமலவேனி முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வரின் கனவு திட்டமான காலை சிற்றுண்டித் திட்டத்தை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட அசூர் ஊராட்சியில் அரசு உதவி பெறும் பள்ளியில் திட்டத்தினை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் ரமேஷ் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, மாவட்ட கல்வி அலுவலர் பேபி, மற்றும் பள்ளி தாளாளர் கார்த்திகேயன், தலைமை ஆசிரியர் சுமதி, உட்பட மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, தாசில்தார் ஜெயபிரகாசம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நரசிம்மன் ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன் திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி, ஒன்றிய குழு தலைவர் சத்யா கோவிந்தராஜ், அசூர் ஊராட்சி மன்ற தலைவர் ராணி குமரகுரு உட்பட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இந்தியாவிற்கே முன்னோடி திட்டமான அரசு பள்ளிகளில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டதினை அரசு உதவி பெறும் பள்ளி மாண வர்கள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு உதவி பெறும் பாத்திமா பள்ளியில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, மாணவர் களுக்கு உணவு வழங்கி , மாணவர்களுடன் இணைந்து உணவு அருந்தி சிறப்பித்தார். உடன் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா உள்ளார்.



காலை உணவு திட்டம் ஊரகப் பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் நேற்று முதல் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டு, துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் எலவமலை பஞ்சாயத்துக்குட்பட்ட விருமாண்டாம் பாளையத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், ஒன்றியக் குழு தலைவர் பேரோடு பிரகாஷ் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் ஊராட்சி, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (15.07.2024) தொடங்கி வைத்து, பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட தளவாய்பட்டினம் ஊராட்சி கிழக்குத் தெருவில் அரசு உதவி பெறும் சி.எஸ்.ஐ. ஆரம்ப பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார், துணைத் தலைவர் சசிகுமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் க.செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆரோன் செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவுபடுத்தப்படுத்தும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் வெண்ணந்தூர் ஒன்றியம் தேங்கல்பாளையம் காந்தி கல்வி நிலையம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் குழந்தைகளுக்கு உணவு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, ஆர்.எம்.துரைசாமி, ஏ.ஆர்.துரைசாமி, செ.வினோபாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.